நாள் 07.12.2023.

அசல் வழக்கு எண்33/2020

வா சா 1 தாமஸ், த/பெ மூக்கன் நாடார்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு வா சா ஆ 11 முதல் 13 வரை ஆவணங்கள் குறியீடு செய்தது சம்பந்தமாக குறுக்கு விசாரணை

வா சா ஆ 11 முதல் 13 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள சரத்துக்கள் பற்றிய விவரத்தை ஆவணத்தின் உரிமையாளரை விசாரித்தால்தான் தெரிய வரும் என்று சொன்னால், அவர்களை விசாரிக்க வேண்டியதில்லை. தாவா சொத்தின் சர்வே எண் 10/5 ஏ இல்லை என்று சொன்னால் சரிதான் சர்வே எண் 10/6 ஆகும். சர்வே எண் 10/6 க்கு தொட்டடுத்துதான் சர்வே எண் 10/5 உள்ளது என்பதை காட்ட நான் தாக்ல செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் கண்டுபிடிக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் ஏற்கனவே அசல் வழக்க 11/2001 என தாமஸ் மற்றும் மாசிலாமணி மீது தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரிதான் அது முடிந்துவிட்டது அந்த வழக்கில் நான் அளித்த வாக்குமூலம்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்று சொன்னால், எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாண வாக்குமூலத்தில் அ வ எண் 11/2001 வழக்கில் கண்டுள்ள பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள விலாசம் என்னுடைய விலாசமா என்றால் என்னுடையதுதான். மேற்படி வழக்கில் குறுக்குவிசாரணை செய்தபோது பட்டாவில் உள்ள நபர்களை அசல் வழக்கு 11/2001 ல் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால், அவ்வாறு நான் சொல்லியிருக்கமாட்டேன். பழைய வழக்கில்

எனக்கு கிரையம் கொடுத்த நபருக்கு பாகப்பிரிவினையில் கிடைத்ததா அல்லது கிரையம் மூலமாக கிடைத்ததா என்று சொன்னால் பூர்வீக சொத்துதான். அசல் வழக்கு எண் 11/2001 ல் நான் கொடுத்த வாக்குமூலத்தை நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா சா ஆ 11 முதல் 13 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்றாலும் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.